இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 27-03-2025

# “பணப்பிரச்சினை அல்ல, இனப் பிரச்சினை”

மும்மொழித் திட்டம் தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் விவாதம் வந்த போது, **“தமிழும் ஆங்கிலமும் தான் தமிழ்நாட்டின் இரு மொழிக் கொள்கை. அதில் எந்த மாற்றமும் இல்லை. இது மொழிக் கொள்கை மட்டுமல்ல, நமது வழிக் கொள்கையும் விழிக் கொள்கையும் இதுதான். எந்தப் பழிச் சொல் சொன்னாலும் இந்த உயிர்க் கொள்கையில் விட்டுத் தர மாட்டோம். விட்டு விலக மாட்டோம்”** என்று உறுதிபடச் சொல்லி இருக்கிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

“இந்தியை ஏற்காவிட்டால் பணம் தர மாட்டோம் என்று மிரட்டினாலும் - பணமே வேண்டாம் - தமிழ் மொழி காப்போம்” என்ற உறுதியை அளித்த முதலமைச்சர் அவர்கள், **“இது பணப்பிரச்சினை அல்ல, நம் இனப்பிரச்சினை. நம் தமிழை, தமிழினத்தை, தமிழ்நாட்டு மாணவக் கண்மணிகளை, இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்சினை ஆகும். இவர்கள் நிதி தரவில்லை என்பதற்காக இனமானத்தை அடமானம் வைத்து வெகுமானம் பெறும் கொத்தடிமை ஆட்சியல்ல இது. தடைக்கற்கள் உண்டு என்றால் அதை உடைத்து எரியும் தடந்தோள்கள் உண்டென்று சொல்லும் திராவிட மாடல் ஆட்சி இது”** என்றும் உணர்ச்சி பொங்கக் குறிப்பிட்டுள்ளார்கள்.

தமிழும் ஆங்கிலமும் என்ற இருமொழித் திட்டத்தால்தான் நம்முடைய தமிழ்நாடு இந்தளவுக்கு வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இதில் மும்மொழித் திட்டம் என்ற பெயரால் சதி செய்யப் பார்க்கிறது பா.ஜ.க. தலைமை. இந்தியை நுழைப்பதற்கான சதித் திட்டம் தான், ‘மும்மொழித் திட்டம்’ ஆகும்.

முதலில் மும்மொழி என்று சொல்வார்கள். பிறகு அதில் இருந்து ஆங்கிலத்தை அகற்றுவார்கள். பின்னர் அதில் இருந்து தமிழை அகற்றுவார்கள். இறுதியாக மிஞ்சி இருக்கப் போவது இந்தி மட்டும் தான். இறுதியாக அது இந்தி என்ற ஒரு மொழிக் கொள்கையாக மாறி விடும். ‘இந்தியாவை ஹிந்தியா’ ஆக்கும் சூழ்ச்சிதான் இது. இந்தி மொழி வழியாக தமிழ் மொழியை அழிக்கும் சதி இது. அதனால் தான் இது, ‘இனப்பிரச்சினை’ என்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

1938 பிப்ரவரியில் காஞ்சியில் நடந்த மாநாட்டில் பேசும்போது தான், ‘இது மொழி திணிப்பு மட்டுமல்ல, கலாச்சார படையெடுப்பு. வடநாட்டாரின் ஆதிக்கப்படையெடுப்பு’ என்றார் பெரியார். ‘இது அரசியல் போராட்டம் அல்ல, கலாச்சாரப் போராட்டம்’ என்றுதான் பெரியார் வலியுறுத்திச் சொன்னார். ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கம் எழுப்பினார். **“ஓ தமிழனே, தமிழ் அன்னை உன் கடமையைச் செய்ய அழைக்கிறாள். ஆரியக் கொடுமையிலிருந்து தன்னை விடுவித்து விடும்படி ஓலமிட்டுக் கொண்டிருக்கிறாள். தாய் நன்றி கொன்ற மகனும் தாய்ப்பணிக் கடமை கொன்ற மகனும் மனிதனாவானா?” என்று கேட்டார். தமிழ்த்தாயின் துகிலை இராஜாஜி உருவுவது மாதிரியும், ஒரு கையில் தொல்காப்பியத்தையும் இன்னொரு கையில் திருக்குறளையும் வைத்துள்ள பெண்ணை இராஜாஜி கத்தியால் குத்துவது மாதிரியும், இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்ட தமிழ்த்தாயை இந்தி பாம்பு கடிப்பதாகவும் கருத்துப்படங்கள் போட்டார்.**

அதிகாரத்தில் இருப்பவர்கள் திணித்தால் அந்த மொழிக்கு அனைத்துத் தகுதியும் தானாகக் கிடைத்துவிடும், எனவேதான் இந்தியை ஒரு மொழிப்பாடமாகக் கூட திணிக்க அனுமதிக்கக் கூடாது என்றார் பேரறிஞர் அண்ணா. இந்தியா முழுவதும் ஒரே பொதுவான எழுத்தை, தேவநாகரி வடிவ எழுத்தை பயன்படுத்த வேண்டும் என்று அண்ணல் காந்தியடிகள் சொன்னதை குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் வலியுறுத்தினார். இதனைக் கடுமையாக எதிர்த்தார் பேரறிஞர் அண்ணா. **“ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்கு என தனி ஒரு எழுத்து வடிவமும், பெரிய நூல்களும் இருந்து வருகிறது. தமிழ் மொழியிலுள்ள திருக்குறளையோ, தொல்காப்பியத்தையோ தேவநாகரி எழுத்தில் எழுதிப் படிக்கச் சொன்னால் திருக்குறள் என்ற ஒரு நூல் தமிழ் மொழியில் கிடையாது என்று கூறக்கூடிய அளவுக்கு அதன் பொருட்செறிவும் அமைப்பும் அற்று இல்லாதொழியும்” என்றார் அண்ணா.**

தமிழனுடைய பண்பாட்டை அழிக்க, அவனது கலாச்சாரத்தை அழிக்க, தமிழ் மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியை ஒழிக்கவே இந்தியைத் திணிக்கிறார்கள் என்றார் அண்ணா. இது வெறும் மொழிப்போராட்டமல்ல, தமிழனின் பண்பாட்டைக் காக்கும் போராட்டம் என்றார் அண்ணா.

**“தமிழர்களைச் சூத்திரர்கள் ஆக்கிய சமஸ்கிருதம் தாம் இந்தி ஆதிக்கமாக வருகிறது” என்றார் தமிழினத் தலைவர் கலைஞர். ‘இந்தி எதிர்ப்புப் போர் என்பது மொழிப்போர் மட்டுமல்ல; இது இன உரிமைப் போர். மொழி ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர். இதில் வெற்றி தோல்வி எந்தப் பக்கம் தாவினாலும் மானத்தைக் காப்பாற்ற ஒரு போர் நடந்தது என்பது மட்டும் சரித்திரத்தில் இடம் பெற்றால் போதும். வருங்காலச் சந்ததியினருக்கு அந்த வரிகள் வேல்களாகும். படை முழக்கமாகும்” என்று பேசினார் கலைஞர்.**

இவை அனைத்தையும் வழிமொழியும் வகையில்தான், ‘இது இனப் பிரச்சினை’ என்று சொல்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

# தமிழ்நாட்டில் அனைவரும் சமம் என்ற நிலையை உருவாக்கியது திராவிட மாடல் ஆட்சி!

## திண்டுக்கல்லில் அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்!



திண்டுக்கல், மார்ச் 23-

திண்டுக்கல் மாவட்டத்திற்கு நலத்திட்டங்களை வாரி வழங்கும் வள்ளலாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளார் என்று திண்டுக்கல்லில் நடைபெற்ற புதிய வழித்தடத்தில் 8 பேருந்துகள் துவக்க விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு தமிழகத்தில் அனைவரும் சமம் என்ற நிலையை உருவாக்கியது திராவிட மாடல் ஆட்சி என அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கன்னிவாடி, ஆத்தூர், நிலக்கோட்டை, நவாமரத்துப்பட்டி, காந்திகிராமம் ஆகிய பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவிகள் காலை மற்றும் மாலை நேரங்களில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குச் செல்ல பேருந்து வசதி வேண்டும் என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர். உடனடியாக அவர்களின் கோரிக்கையை ஏற்று தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றதால் மேற்கண்ட கிராமங்களுக்கு புதிய வழித்தடத்தில் 8 பேருந்துகள் இயக்கப்பட்டன. இதற்கான துவக்க விழா திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் எஸ்.சரவணன் தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், திண்டுக்கல் எம்.பி. ஆர்.சச்சிதானந்தம், மேயர் இளமதிஜோதிபிரகாஷ், துணை மேயர் ச.ராஜப்பா, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், மார்கிரேட்மேரி, பிலால் உசேன், பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர்கள் ஆத்தூர் நடராஜன், இரா.தண்டபாணி ஆகியோர் முன்னிலைவகித்தனர். திண்டுக்கல் மண்டல பொது மேலாளர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்று பேசினார்.

விழாவில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசும்போது, திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரை தமிழக முதல்வரிடம் நாம் கேட்கும் அனைத்து நலத்திட்டங்களையும் வாரி வழங்கும் வள்ளலாக தமிழக முதல்வர் உள்ளார். கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுத்தால் தான் இந்த கிராமம் முன்னேறுவதோடு அங்குள்ள மாணவர்களும், கல்வியில் உயர் நிலையை அடைவார்கள். விவசாயிகளும் தங்களுடைய விளை பொருட்களை அருகில் உள்ள நகரங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்ய முடியும். இங்கு கழகத்தை சேர்ந்த பலர் வந்துள்ளனர். இந்த ஒற்றமையை பார்க்கும் போது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அழைக்காவிட்டாலும், பேர் சொல்ல மறந்தாலும் எதையும் எதிர்பார்க்காமல் கழகப் பணி ஆற்றுபவர்கள் தான் நம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். அனைவரும் சமம் அனைவருக்கும் எல்லாம் என்ற நிலையை உருவாக்குவது தான் திராவிட மாடல் ஆட்சி என்றார்.

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொள்கைகளை, நலத்திட்டங்களை பின்பற்றி தான் அனைத்து முதல்வரும் செயல்படுகிறார்கள். தமிழகம் தான் இந்தியாவிற்கே வழிகாட்டியாக உள்ளது. அதற்கு தான் மக்களுக்கான ஆட்சி மக்கள் நன்மைக்கான ஆட்சி, தமிழகத்தில் நடைபெறுவது தான் என்றார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் ப.க. சிவகுருசாமி, நெடுஞ்செழியன், வெள்ளிமலை, பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் சுப்பையா, போக்குவரத்துக் கழக செயலாளர் பொன் செந்தில், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், டென்னி, திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், விடுதலை முருகன். பேரூராட்சி மனறத் தலைவர்கள் கன்னிவாடி தனலெட்சுமிசண்முகம், ஸ்ரீராமபுரம் சகிலா ராஜா, அய்யம்பாளையம் ரேகா ஐயப்பன்,

திண்டுக்கல் பகுதி செயலாளர்கள் ராஜேந்திரகுமார், பஜ்ரூல்ஹக், ஜானகிராமன், சந்திரசேகர் மற்றும் முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காணிக்கைசாமி, காளீஸ்வரி மலைச்சாமி, பாப்பாத்தி, செல்விகாங்கேயன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் கே.புதுக்கோட்டை ரமேஷ் மற்றும் திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் அருள்வாணி, அமலோற்பவமேரி, மனோரஞ்சிதம், சுபாசினி, நெல்லை சுபாஷ் உட்பட திமுக நிர்வாகி கள், சார்பு அணி நிர்வாகிகள், தோழமை கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக அரசு போக்குவரத்து கழக செய்தி மக்கள்தொடர்பு அலுவலர் குர்சித்பேகம் நன்றி கூறினார்.

### கீழ்பெண்ணாத்தூர் தொகுதி

# வேட்டவலத்தில் புறவழிச்சாலை அமைக்கும் பணி!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!



சென்னை, மார்ச் 27 -

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது, சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, தமது கீழ்பெண்ணாத்தூர் தொகுதி - வேட்டவலத்தில் புறவழிச்சாலை அமைக்கும் பணி குறித்து எழுப்பிய கேள்விக்கு, பொதுப் பணி மற்றம் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு விரிவான விளக்கம் அளித்தார்.

கேள்வி நேரத்தின் போது இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**பேரவைத் துணைத் தலைவர் கு. பிச்சாண்டி:** என்னுடைய கீழ்பெண்ணாத் தூர் தொகுதியிலே வேட்டவலத்திற்கு புறவழிச் சாலை அறிவிக்கப் பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் எப்போது தொடங்கும்? திருவண்ணாமலையிலே தெலுங்கானா, ஆந்திராவிலிருந்து அதிக பக்தர்கள் வருவதால் அதிகளவு கூட்டம் இருக்கின்ற காரணத்தால் Collectorate-லிருந்து செங்கம் ரோடு இணைக்கின்ற அந்த by pass சாலை இந்த ஆண்டே போடப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். இன்றைக்கு ஒன்றிய அரசு நெடுஞ்சாலைத் துறையின்மூலம் போடப்படுகின்ற எல்லா இடங்களிலும் precast-ஐப் பயன்படுத்துவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அது போன்று, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையும் பணிகள் விரைவாக நடைபெறுவதற்கு precast முறையில் culvert-கள் மற்றும் பாலங்கள் அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, சென்னையிலே எப்படி வெளி வட்டச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறதோ அது போல மதுரை, திருச்சி மற்றும் சேலம் போன்றவைகளுக்கெல்லாம் வெளிவட்டச் சாலைகளை இப்போதே அதற்கான முயற்சிகளை எடுத்தால் அது நல்ல முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்து, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?

**அமைச்சர் எ.வ.வேலு:** முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, தமிழ்நாட்டிலே சாலைகளுக்கு முக்கியத்துவம் தந்து பல்வேறு நகரப் பகுதியிலே புறவழிச் சாலைகளை நாம் அமைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இங்கேயிருக்கிற 234 சட்டமன்ற உறுப்பினர்களும் அறிவார்கள். அந்த வகையிலே, திருவண்ணாமலை ஆன்மிகத் திருத்தலமாக இருக்கின்ற காரணத்தால், கர்நாடக மாநிலம், ஆந்திர மாநிலம் போன்ற பல மாநிலங்களிலிருந்து ஆன்மிகப் பெருமக்கள் தங்களுடைய ஆன்மிகக் கடமையை ஆற்றுவதற்காக ஒரு நாளைக்கு 25,000, 30,000 என்று இருந்தது இன்றைக்கு இலட்சக்கணக்கான மக்கள் வருவதைப் பார்க்க முடிகிறது. அதை உணர்த்துகின்ற வகையில்தான் நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இந்தக் கேள்வியை இங்கு எழுப்பியிருக்கிறார்கள்.

அவருடைய தொகுதியில் இருக்கிற வேட்டவலத்தைப் பொறுத்தளவிற்கு அது தேசிய நெடுஞ்சாலை. இந்த தேசிய நெடுஞ் சாலைக்கு ஒரு முறைக்கு பல முறை நிதின் கட்கரி அவர்களுக்கு அழுத்தம் கொடுத்ததன் அடிப்படையில் இந்த புறவழிச்சாலைக்கு நிதி ஒதுக்கப்பட்டு நில எடுப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த நில எடுப்புப் பணிகள் முடிந்தவுடனே சாலை அமைக்கப்படும்.

மற்றொன்று; இந்த ரவுண்டானா சாலையைப்பற்றிச் சொன்னார்கள். திருவண்ணாமலையைப் பொறுத்தளவிற்கு முக்கால் பகுதி ரவுண்டானா சாலை அமைக்கப்பட்டுவிட்டது. ஒன்று; வேலூரிலிருந்து செங்கம் சாலையை இணைத்து விட்டோமென்று சொன்னால் ரவுண்டானா சாலை அமைந்துவிடும். அதற்காக மாநில அரசின் சார்பாக நில எடுப்புக்கென்று நிதி ஒதுக்கப்பட்டது. ஆக, ஒன்றிய அரசாங்கம் இரண்டு ஒன்றிய சாலைகளாக அதாவது தேசிய நெடுஞ்சாலை வேலூரும் தேசிய நெடுஞ்சாலை; செங்கமும் தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தினால் மாநில நெடுஞ்சாலையிலே பணம் கொடுக்க வேண்டிய அவசியமில்லையென்று அவர்களே எனக்குக் கடிதம் எழுதினார்கள். அந்த அடிப்படையிலே ஒன்றிய அரசாங்கத்தினுடைய நிதியைப்பெற்று, இப்போது நிலமெடுப்புப் பணியிலே மாவட்ட வருவாய் அலுவலருக்கு ஆணை வந்திருக்கிறது.

இன்னும் இரண்டொரு மாதங்களிலே நிலமெடுப்புப் பணிகள் முடிந்தவுடனேயே இந்த நிதியாண்டிலேயே அந்த மீதமிருக்கிற ரவுண்டானா சாலையை அமைப்பதற்கு அரசு அதற்கு வேண்டிய அனைத்து முயற்சியும் எடுக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




சென்னை, எழிலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறையின் 2025–2026 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்கக் குறிப்பு, அறிவிப்புகள், பொது விநியோகம் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (25.03.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ. சண்முகசுந்தரம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த.மோகன், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு காவல்துறைத் தலைவர் ரூபேஷ் குமார் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.